[29th September 1955

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் ஏற்கெனவே சொன்னேன் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய தகவலிலிருந்து ஆறு ஹரிஜனங்களே உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது என்று. அதற்கு மேல் ஹரிஜனங்களுக்கு உத்தியோகம் கொடுக்கப்படவில்லை. அங்கத்தினருக்குக்கூட தெரியும், ஹரிஜனங்கள் படித்துவிட்டு காலேஜியிலிருந்து வந்தவுடன் கலெக்டர் வேலையும், டிபுடி சூப்ரண்டென்ட் வேலையும் தான் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். சாதாரணமான உத்தியோகங்களுக்குச் சென்றால் அது அவர்களுக்கு கௌரவக் குறைவாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். ரொம்ப நாட்களுக்குப் பிறகு வேலை கிடைக்கவில்லை என்ற பிறகு இம்மாதிரியான கீழ் உத்யோகங்களையாவது கொடுங்கள் என்று வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் தான் ஹரிஜனங்களுக்கு உத்யோகங்கள் கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது.

8-50 a.m. SRI K. R. VISWANATHAN : Are the teachers of these schools liable for transfer or are they kept in the same place?

THE HON. SRI C. SUBRAMANIAM : They are under the administration of the district board and they are liable to transfer.

SRI V. BALAKRISHNAN : பால் வாரியாகச் சொல்வதற்கு கனம் மந்திரி அவர்களிடத்தில் கணக்கு இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே ஸ்ரீ பாலகிருஷ்ணன் உப கேள்வி போடப்போவதாகத் தெரிந்திருந்தால் பால் வாரியாகக் கணக்கு எடுத்துக் கொண்டு வந்திருப்பேன்.

SRI A. RATNAM : சென்னை ராஜ்யத்திலேயே அதிகமான ஹரிஜனங்கள்தான் பள்ளி ஆசிரியராகப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதும் குறிப்பாக ஆரம்ப ஆசிரியர் பயிற்சியை அதிகமான ஹரிஜன மாணவர்கள் தான் பெற்றிருக்கிறார்கள் என்பதும் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அதிகமான ஹரிஜனங்கள் ஆசிரியராகப் பயிற்சி பெற்றிருந்தும், பலர் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தும், தென்னாற்காடு மாவட்டத்தில் 126 ஒராசியர்களைத் தேர்ந்தெடுத்திருக்கும் போது அதில் ஆறு பேர்களே ஹரிஜனங்களில் இருந்து தேர்ந்தெடுத்திருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு இந்தெந்தத் தகுதிகள் இருக்க வேண்டுமென்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிறார்கள். அதுமாதிரியான தகுதி உடையவர்கள் யாராவது ஹரிஜனங்களிலிருந்து விண்ணப்பம் போட்டு, அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால், அதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரும்படியாக கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KATTIMUTHU : படித்துவிட்டு இருக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு சுலபமாக கலெக்டர் வேலையும், ஜில்லா சூப்பிரண்டு வேலையும் கிடைக்காது என்பது தெரியும். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இந்த ஹரிஜன மாணவர்களுக்கு ஆசிரியர் வேலையாவது கொடுப்பார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆகவே எங்களுடைய கோரிக்கைக்கு இணங்கி இவர்களுக்கு ஆசிரியர் உத்தியோகமாவது கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்ரீ கட்டிமுத்து சொல்லுகின்ற இந்த யோசனையை ஹரிஜன மாணவர்களிடையே படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் கவனிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற ஹரிஜன மாணவர்

29th September 1955]

(*b*) The extent of damage caused to the three country boats is estimated at Rs. 1,700. No cargo was jettisoned on account of the bad whether. Goods worth about Rs. 600 were spoiled due to the rough seas and winds and two bags of rice were abandoned as completely spoiled.

(*c*) The cargo damaged consisted of rice, sugar, tea-dust, horsegram, salt, clothes, oil, soap, etc.

(*d*) Jettisoning of private cargo is not uncommon and the loss is not usually made good to the islanders at Government cost. Sufficient foodgrains and clothing had been transported to the islands even before the storm broke out and those withheld on account of the storm were not appreciable.

SRI T. C. NARAYANAN NAMBIAR: After the damage caused to the three country boats, did the Government enquire whether the damage caused to the boats adversely affected the islanders inasmuch as the boats contained foodgrains and clothes to be taken to the islands and, if so, when and what was the finding? As far as my information goes, they were put to great difficulty for some days because they did not have these necessaries of life? 9-10 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU: Only after gathering information the answer has been prepared. As regards damage to the goods, I have already stated that there was damage to a certain extent. There has been enough stock in the islands to meet the needs of the people.

SRI K. KUNHI MOHAMED SHAFEE: May I know whether foodgrains and clothes were transported to the islands after the damage due to the cyclone?

THE HON. SRI M. A. MANICKAVELU: I should think so.

* 2563 *Q.*—SRI M. CHADAYAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total number of families who were seriously affected by cyclone and flood in Chirakkal taluk in Malabar in May last;

(*b*) the total number of such families that received help from the Government to build or repair houses; and

(*c*) the nature of help given to the other less serious cases?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) In Chirakkal taluk 614 houses were destroyed and 1,895 houses were partly damaged. Three thousand five hundred and eight persons were rendered homeless.

(*b*) & (*c*) The exact number of families that received help from the Government is not known. The Collector of Malabar has sanctioned relief at the rates of Rs. 30 and Rs. 15 for each Harijan for reconstruction and substantial repairs respectively of houses affected and at the rates of Rs. 20 and Rs. 10 for each non-Harijan. The Government have sanctioned a sum of